பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

10 09 2024 6 30

செவ்வாய்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. அறிவியில் ஆராய்ச்சி பணிகளில் உள்ள தடைகளை அகற்ற வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.
2. புதிய தேசிய கல்விக் கொள்கை தாய்மொழிக் கல்வியை ஊக்குவிப்பதாக உள்ளது என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.
3. சென்னை, செங்கல்பட்டு, உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வெள்ளத்தடுப்பு பணிகள் இம்மாத இறுதிக்குள் நிறைவுபெறும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் தெரிவித்துள்ளார்.
4. தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்று மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.
5. வியட்நாம் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் திரிஷா ஜோலி – காயத்ரி கோபிசந்த் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

[]<<<>>>[]

அறிவியில் ஆராய்ச்சி பணிகளில் உள்ள தடைகளை அகற்ற வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

தேசிய அனுசந்தன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் முதலாவது நிர்வாகக் குழுக் கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், ஆராய்ச்சி நிறுவனங்களின் தரத்தை மேலும் உயர்த்தி அவற்றை மேம்படுத்த வேண்டும் என்றார்.

ஆராய்ச்சி பணிகளுக்கான நிதி தடையின்றி வழங்கப்படும் என்று அவர் கூறினார்.

முக்கியமான துறைகளில் அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளை ஆய்வுத் திட்டங்களை செயல்படுத்தும் என்றும் திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

[]<<<>>>[]

புதிய தேசிய கல்விக் கொள்கை தாய்மொழிக் கல்வியை ஊக்குவிப்பதாக உள்ளது என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.

நீலகிரி மாவட்டம் குன்னூரில் நடைபெற்ற பிஜேபி உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சிக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிஜேபி

தலைமையிலான மத்திய அரசு ஹிந்தி மொழியை ஒருபோதும் திணிக்கவில்லை என்று கூறினார்.

*( சவுண்ட்பைட் - எல் முருகன் ) -40---- செகண்ட்*

பின்னர் கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் பிஜேபி உறுப்பினர் சேர்க்கை முகாமை திரு எல் முருகன் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியின்போது மத்திய அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்து உறுப்பினர்களிடம் அவர் எடுத்துரைத்தார்.

**[]<<<>>>[]**

சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வெள்ளத்தடுப்பு பணிகளை இம்மாத இறுதிக்குள் நிறைவுபெறும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

இன்று சென்னையில் பருவமழைக்கு முந்தைய முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக திரு துரைமுருகன் தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

சென்னை விருகம்பாக்கம் - அரும்பாக்கம் கால்வாய், வேளச்சேரி ஏரி, பங்கிங்காம் கால்வாய் உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கால்வாய் சீரமைப்புப் பணிகளை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளை அவர் அறிவுறுத்தினார்.

வெள்ளத்தடுப்புக்காக தேவையான மணல் மூட்டைகள், சவுக்குக் கம்புகள் போன்றவற்றை தயார் நிலையில் இருப்பு வைக்குமாறும் திரு துரைமுருகன் கேட்டுக்கொண்டார்.

[]<<<>>>[]

வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்படாமல் உள்ள நிலங்களை மீண்டும் உரியவர்களிடம் வழங்குவது தொடர்பாக ஆய்வு செய்வதற்காக உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளதாக மாநில வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு முத்துசாமி தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வீட்டுவசதி வாரியம் தொடர்பான பெரும்பாலான பிரச்சினைகளுக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் தீர்வு காணப்பட்டுள்ளதாகக் கூறினார்.

வீட்டுவசதி வாரியத்தில் பொதுமக்களுக்கு உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க மாநிலம் முழுவதும் 16 இடங்களில் புகார் பெட்டிகள் வைக்கப்பட்டு ஐயாயிரத்து 500 மனுக்கள் பெறப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கோரிக்கைகள் தொடர்பாக அந்தந்த மாவட்ட ஆட்சியர்களிடம் கருத்துக்களைப் பெற்று விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரு முத்துசாமி தெரிவித்தார்.

[]<<<>>>[]

உலக தற்கொலை தடுப்பு தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது.

இந்நாளையொட்டி நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

செயல் மூலம் நம்பிக்கையை உருவாக்குதல் என்ற கருப்பொருளின் அடிப்படையில் இந்த ஆண்டு இந்த தினம் கடைபிடிக்கப்பட்டது.

இதனையொட்டி மதுரை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய கல்லூரி முதல்வர் டாக்டர் செல்வராணி, தற்கொலையை தடுப்பது குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்று கூறினார்.

<u>*( சவுண்ட்பைட் - செல்வராணி ) —39 செகண்ட்*</u>

இந்நாளையொட்டி திண்டுக்கல் மாவட்டம பழனி அரசு மருத்துவமனை சார்பில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

**[]<<<>>>[]**

தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்று மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் அரசுப் பள்ளிகளில் ஆய்வு மேற்கொண்டபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஆசிரியர்களின் கோரிக்கையை அரசு மதிப்பதாக தெரிவித்தார்.

இன்று போராட்டத்தில் ஈடுபட்ட டிட்டோ ஜாக் அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று அவர் கூறினார்.

அவர்களின் 31 அம்ச கோரிக்கைகளில் 12 கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

சென்னை மாநகரில் விநாயகர் சதுர்த்தியையொட்டி பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ள விநாயகர் சிலைகளை கடலில் கரைப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை மாநகர காவல்துறை வெளியிட்டுள்ளது.

வரும் 15-ஆம் தேதி பல்வேறு அமைப்புகள் சார்பில் நடைபெறும் விநாயகர் ஊர்வலத்துக்கு சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

பொது இடங்களில் காவல்துறை அனுமதியுடன் வைக்கப்பட்டுள்ள விநாயகர் சிலைகளை உரிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஊர்வலமாக

எடுத்துச் சென்று கடலில் கரைக்க முழு ஒத்துழைப்பு வழங்குமாறு காவல்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

கட்டுப்பாடுகளை மீறுவோர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மாநகர காவல்துறை தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

தமிழ்நாடு வணிகர் சங்க பேரவைத் தலைவர் திரு வெள்ளையன் சென்னையில் இன்று பிற்பகல் காலமானார். அவருக்கு வயது 76

உடல் நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி காலமானர்.

அவரது மறைவுக்கு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி, பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை, பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு உள்ளிட்ட தலைவர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் அடுத்த இரண்டு நாட்களுக்கு ஒரு சில இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

*( சவுண்ட்பைட் - செ க ) --- 44 செகண்ட்*

[]<<<>>>[]

திருவாரூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் கடுமையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதம் கூடுதல் உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் தகுதியுடைய பயனாளிகளை தேர்வு செய்யும் முகாம் இன்று நடைபெற்றது.

[]<<<>>>[]

ராணிப்பேட்டை மாவட்டத்தில் வியாபாரிகளும், பொதுமக்களும் பத்து ரூபாய் நாணயத்தை வாங்க மறுத்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சியர் திருமதி சந்திரகலா தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையத்தில் உள்நாட்டு மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்பவர்களுக்கு விவசாய கடன் அட்டை வழங்கும் முகாம் இன்று நடைபெற்றது.

[]<<<>>>[]

கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை ஆட்சியர் திரு எம் எஸ் பிரசாந்த் இன்று ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

திருவள்ளூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் முகாம் வரும் 13-ஆம் தேதி நடைபெறும் என ஆட்சியர் திரு பிரபு சங்கர் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கான முழு உடல் பரிசோதனை முகாமை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மேயர் திருமதி பிரியா இன்று தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

சென்னையில் உள்ள 19 மண்டலங்களிலும் பொது விநியோகம் தொடர்பான குறைதீர்ப்பு முகாம் வரும் சனிக்கிழமை நடைபெறும் என மாநில உணவுபொருள் வழங்கல்துறை தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

ஹாங்காங் ஓப்பன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது.

இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் திரிஷா ஜோலி – காயத்ரி கோபிசந்த் இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியது.

இந்த இணை 21-14, 21-13 என்ற செட் கணக்கில் யுக்ரைனின் **Polinea – Yevheniia** இணையை வென்றது.

**[]<<<>>>[]**

வியட்நாம் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Alap Mishra,** பரத் ராகவ், **Satishkumar** ஆகியோர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.